செய்தி வெளியீடு எண்.92 நாள்.06.08.2021

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (டாம்கோ) மூலம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டை சார்ந்த சிறுபான்மையினர்களுக்கு சுமார் ரூ.100.00 கோடி அளவில் கடன் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2020–21 ஆம் ஆண்டில் இக்கழகத்தின் கடன் திட்டங்களின் கீழ் ரூ.40.41 கோடி 6587 சிறுபான்மையினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் நிதியாண்டிற்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலம் சிறுபான்மையினர்களுக்கு ரூ.100.00 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (டாப்செட்கோ) மூலம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டை சார்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கு சுமார் ரூ.100.00 கோடி அளவில் கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2020–21ஆம் ஆண்டில் இக்கழகத்தின் கடன் திட்டங்களின் கீழ் ரூ.94.01 கோடி 14325 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் நிதியாண்டிற்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கு ரூ.120.00 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களான தனிநபர் கடன் திட்டம், சுய உதவி குழுக்களுக்கான சிறு தொழில் கடன் திட்டம், கல்வி கடன் திட்டம், கைவினை கலைஞர்களுக்கு கடன் திட்டம் ஆகிய திட்டங்களுக்கான கடன்கள் வழங்கப்பட உள்ளது.

டாம்கோ மூலம் செயல்படுத்தப்படும் கடனுதவித் திட்டம் 1–ன் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,20,000/–மிகாமல் இருக்க வேண்டும். திட்டம் 2–ன் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் ரூ.8,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

திட்டம் 1–ன் கீழ் தனிநபர் கடன் ஆண்டிற்கு 6% வட்டி விகிதத்திலும் அதிக பட்ச கடனாக ரூ.20,00,000/– மும் திட்டம் 2–ன் கீழ் ஆண்களுக்கு 8% பெண்களுக்கு 6% வட்டி விகிதத்திலும் அதிக பட்ச கடனாக ரூ.30,00,000/. வரை கடன் வழங்கப்படுகிறது. கைவினை கலைஞர்களுக்கு ஆண்களுக்கு 5% பெண்களுக்கு 4% வட்டி விதத்தில் அதிக பட்ச கடனாக ரூ.10,00,000/– வரை கடன் வழங்கப்படுகிறது.

சுய உதவிக்குழுக்கடன் நபர் ஒருவருக்கு 1,00,000/– ஆண்டிற்கு 7% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. திட்டம் 2–ன் கீழ் ஆண்களுக்கு 8% பெண்களுக்கு 6% வட்டி விகிதத்திலும் நபர் ஒருவருக்கு ரூ.1,50,000/– கடன் வழங்கப்படுகிறது.

மேலும் சிறுபான்மையின மாணவ/மாணவிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளங்கலை/முதுகலை தொழிற்கல்வி/தொழில்நுட்பக் கல்வி பயில்பவர்களுக்கு அதிகப்பட்சமாக திட்டம் 1–ன் கீழ் ரூ.20.00,000/– வரையில் 3% வட்டி விகிதத்திலும், திட்டம் 2–ன் கீழ் மாணவர்களுக்கு 8% மாணவியர்களுக்கு 5% வட்டி விகிதத்திலும் ரூ.30,00,000/– வரையிலான கல்வி கடனுதவி வழங்கப்படுகிறது.

டாப்செட்கோ மூலம் வழங்கப்படும் பொது காலக் கடன் திட்டத்தின் கீழ் சிறு தொழில் வியாபாரம் செய்ய தனி நபர்களுக்கு அதிகபட்ச கடன் தொகை ரூ.15.00 இலட்சம் 6% முதல் 8% வரை வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. பெண்களுக்கான சிறு கடன் வழங்கும் திட்டத்தில் அதிகபட்சம் ஒரு குழுவிற்கு 15.00 இலட்சம் (ஒரு நபருக்கு ரூ.1.00 இலட்சம் வீதம்) 4% வட்டியும், ஆடவருக்குக்கான சிறு கடன் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.15.00 இலட்சம் 5% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. மகளிருக்கான காலக்கடன் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சம் 5% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது, கறவை மாடு வாங்க டாப்செட்கோ கடன் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு இரண்டு கறவை மாடுகள் வாங்குவதற்காக ஒரு கறவை மாட்டிற்கு ரூ.30,000/– வீதம் ரூ.60,000/– 6% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பாதிப்பால் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவரின் குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடிய நபர் உயிரிழிந்திருப்பின் அவர்களது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை முன்னேற்றம் வகையில் தேசிய பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார வளர்ச்சிக் கழகம் புதுடெல்லி SMILE என்ற கடன் திட்டத்தை செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தில் அதிகபட்சமாக கடன் திட்டத்தொகை ரூ.5.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. கடன் திட்டத்தொகையில் 80 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.4.00 இலட்சம் வரை கடன் வழங்கப்படும். மீதமுள்ள 20 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும். இந்த கடன் திட்டத்திற்கு ஆண்டுக்கு 6 சதவீதம் என்ற வட்டி விகிதத்தில் கடனை திரும்பச் செலுத்தப்பட வேண்டும். டாப்செட்கோ கடன் திட்டத்தின் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் நகர்ப்புறம் மற்றும் கிராமபுரத்திற்கு ரூ.3,00,000/–க்கு மிகாமலும், வயது வரம்பு 18 ஆண்டுகளுக்கு மேல் 60 வயதுக்குள் இருத்தல் வேண்டும்.

எனவே, சென்னை மாவட்டத்தில் வசிக்கும் சிறுபான்மையினர்கள் (கிறித்துவ, இஸ்லாமிய, சீக்கியர், புத்த, பார்சி, சமண மற்றும் ஜெயின்) மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்கள் மேற்படி சிறப்பு முகாம்களில் கலந்துக் கொண்டு கடன் விண்ணப்பங்களை பெற்று அதனை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடன் மனுக்களுடன், சார்ந்துள்ள சாதி சான்று, ஆதார் அட்டை, வருமான சான்று, உணவு பங்கீடு அட்டை அல்லது இருப்பிடச் சான்று, கடன் பெறும் தொழில் குறித்த விவரம் / திட்ட அறிக்கை, ஓட்டுநர் உரிமம் (போக்குவரத்து வாகனங்கள் கடன் பெறுவதற்காக இருந்தால் மட்டும்) மற்றும் கூட்டுறவு வங்கி கோரும் இதர ஆவணங்கள் சமர்பிக்கப்பட வேண்டும். கல்வி கடனுக்கு விண்ணப்பிக்கும்போது பள்ளி மாற்று சான்றிதழ், உண்மைச் சான்றிதழ் (Bonafide certificate), கல்விக் கட்டணங்கள் செலுத்திய இரசீது / செலான் (original) மற்றும் மதிப்பெண் சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் ஒளிப்பட நகல்களையும் சமர்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். டாம்கோ/ டாப்செட்கோ கடன் திட்டங்களுக்கான தொகை பெற விண்ணப்பங்கள் வட்டாட்சியர் அலுவலகங்களில் வட்டம் வாரியாக கீழ் குறிப்பிட்டுள்ள தேதிகளில் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

| வ.எண் | வட்டம் | தேதி |
|---|---|---|
| 1. | அம்பத்தூர் | 25.08.2021 |
| 2. | மாதவரம் | 27.08.2021 |
| 3. | திருவொற்றியூர் | 01.09.2021 |
| 4. | தண்டையார்பேட்டை | 03.09.2021 |
| 5. | பெரம்பூர் | 07.09.2021 |
| 6. | அயனாவரம் | 09.09.2021 |
| 7. | அமைந்தக்கரை | 15.09.2021 |
| 8. | மதுரவாயல் | 17.09.2021 |
| 9. | புரசைவாக்கம் | 22.09.2021 |
| 10. | எழும்பூர் | 24.09.2021 |
| 11. | மைலாப்பூர் | 01.10.2021 |
| 12. | மாம்பலம் | 06.10.2021 |
| 13. | கிண்டி | 08.10.2021 |
| 14. | ஆலந்தூர் | 12.10.2021 |
| 15. | வேளச்சேரி | 20.10.2021 |
| 16. | சோழிங்கநல்லூர் | 22.10.2021 |

இச்சிறப்பு முகாம்களில் கலந்துக் கொண்டு அனைத்து சிறுபான்மையினர்களும் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்கள் அனைவரும் டாப்செட்கோ/ டாம்கோ மூலம் கடன் பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01